**சுருக்கம்**

அடையாறு பூங்கா திட்டம் – அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக்குழு – அடையாறு பூங்கா (சிறப்பு நோக்க நிறுவனம்) – அடையாறு பூங்கா நிறுவனத்தை நிர்வகிக்க திட்ட இயக்குநர் மற்றும் இதர அலுவலர் பதவிகள் உருவாக்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.176 நாள்: 24.09.2009

திருவள்ளுவர் ஆண்டு – 2040
புரட்டாசி – 08

படிக்கவும்:

1. அரசு ஆணை (நிலை) எண்.632, வருவாய்த்துறை, நாள் 22.12.2003
2. அரசு ஆணை (நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.11.2005
3. அரசு ஆணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 11.10.2006
4. அரசு ஆணை (நிலை) எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 06.06.2007
5. அரசு ஆணை (நிலை) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 18.02.2008
6. அரசு ஆணை (நிலை) எண்.24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 18.02.2008
7. அரசு ஆணை (நிலை) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.03.2008

மீண்டும் படிக்கவும்:

8. தமிழ்நாடு நகர்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர், அடையாறு பூங்கா நிறுவனத்தின் கடித எண்.APC/Rec/2009/01, நாள் 21.04.2009

* * * * *

**ஆணை:**

அடையாறு சிற்றோடைப் பகுதியில் ஒரு திறந்த வெளிப் பூங்கா அமைக்க புல எண்.4309/1 ல் 1047 மனைப் பரப்பு நிலம் சென்னை மாநகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கி வரிசை எண்.1 ல் கண்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. அடையாறு சிற்றோடை சுற்றுச்சூழல் பூங்கா நிறுவி வரிசை எண்.2 ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. வரிசை 3 ல் படிக்கப்பட்ட

அரசாணையில் அடையாறு சிற்றோடை சுற்றுச்சூழல் பூங்கா திட்டம் "அடையாறு பூங்கா" என பெயர் மாற்றப்பட்டு ரூ.100 கோடியில் உருவாக்கவும் என இதை பராமரிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் 7 பேர் கொண்ட அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக்குழு அமைக்கவும் இத்திட்டத்தை நிர்வகிக்க இந்திய கம்பெனிகள் சட்டத்தில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் அமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் வரிசை எண். 5 ல் படிக்கப்பட்ட அரசாணையில் அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக்குழுவில் கூடுதலாக 2 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு உறுப்பினர் செயலாளராக மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதிசேவைகள் நிறுவனம் அவர்களை நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. வரிசை எண்.7 ல் படிக்கப்பட்ட அரசாணையில் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு 25 ன் கீழ் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் அடையாறு பூங்கா என்ற பெயரில் உருவாக்க ஆணையிடப்பட்டது. ஆதன்படி அடையாறு பூங்கா என்ற கம்பெனி 30.10.2008 அன்று உருவாக்கப்பட்டுள்ளது.

2. மேலும் வரிசை எண்.4 ல் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு சிறந்த சுற்றுச்சூழல் ஆர்வாளர்களை கொண்டு ஒரு ஆலோசனை குழுவை ஏற்படுத்தி உள்ளது. வரிசை எண்.6 ல் படிக்கப்பட்ட அரசாணையில் அடையாறு முகத்துவாரப் பகுதியில் சுற்றுச்சூழலை சீரமைக்க ஏதுவாக நீதிமன்ற ஆணையின்படி இப்பணிகளை கண்காணிக்க ஒரு கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

3. தற்போது அடையாறு பூங்கா, இயக்குநராக உள்ள தமிழ்நாடு நகர்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்:

1) அடையாறு பூங்காவில் முதற்கட்டமாக 58 ஏக்கர் நிலபரப்பில் ரூ.19.80 கோடி செலவில் சுற்றுச் சூழல் சீரமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2) மீதமுள்ள 300 ஏக்கரில் சுற்றுச் சூழல் சீரமைக்கும் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

3) அதிவேக போக்குவரத்து வட்டச் சாலைக்கான அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது 58 ஏக்கர் நிலத்தில் சுற்றுச் சூழல் சீரமைக்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இது சம்மந்தமாக ஆலோசனைக்குழு கூட்டம் மற்றும் திட்ட கண்காணிப்புக் குழு கூட்டமும் தொடர்ந்து நடந்து வருகிறது எனவும், மேலும் ஒப்பந்ததாரர் கூட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் கூட்டமும் நடைபெறுகிறது எனவும், திட்ட வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. அனைத்து பணிகளும் பலரின் கூட்டு முயற்சி மற்றும் மேற்பார்வையுடன் நடைபெற்று வருகிறது என்றும் அடையாறு பூங்கா இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேற்குறித்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு சென்ற 31.03.2009 அன்று நடந்த அடையாறு பூங்காவின் இரண்டாவது இயக்குநர் குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட பதவிகளை உருவாக்க தீர்மான எண்.22/2008–09, நாள் 31.03.2009 மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், இப்பணியிடங்களுக்கான செலவுகள் அனைத்தும் அடையாறு பூங்கா நிறுவனம் மூலம் மேற்கொள்ள உள்ளதாகவும், இப்பணியிடங்களில் நியமிப்பவர்களுக்கு பொதுத்துறை நிறுவனங்களுடைய விதிகள், ஒழுங்கு நடவடிக்கைகள், சம்பளம், படி மற்றும் இதர சலுகைளும் பொருந்தும் எனவும் அடையாறு பூங்கா இயக்குநர் தெரிவித்து கீழ்கண்ட பதவிகள் உருவாக்க ஆணை கோரி உள்ளார்:

| வ. எண். | பதவி | பதவியின் எண்ணிக்கை | நியமனம் செய்யும் முறை |
|---|---|---|---|
| 1. | திட்ட இயக்குநர் | 1 | IAS (or) IFS மூலமாக |
| 2. | திட்ட அலுவலர் | 2 | விவசாயம்/தோட்டக்கலை/ வனம் சார்ந்த துறைகளிலிருந்து அயற்பணி மூலமாக, அடிப்படை சம்பளம் ரூ.8000–13500/– (Pre revised) |
| 3. | நிர்வாக மற்றும் கணக்கு அலுவலர் | 1 | கருவூல கணக்கு துறையிலிருந்து அயற்பணி பணி மூலமாக, அடிப்படை சம்பளம் ரூ.8000–13500/– (Pre revised) |
| 4. | நிர்வாக மற்றும் கணக்கு உதவியாளர் | 1 | ஆயற்பணி அல்லது ஒப்பந்தம் மூலமாக |
| 5. | அலுவலக உதவியாளர் மற்றும் ஒட்டுநர் | 1 | ஒப்பந்தம் மூலமாக |
| | மொத்தம் | 6 | |

5. மேற்குறித்த சூழ்நிலையில் மேலே பத்தி 3 மற்றும் 4 ல் கண்ட கருத்துருவை நன்கு ஆராய்ந்த அரசு அதனை சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது:-

1) அடையாறு பூங்கா நிறுவனத்தில் கீழ்க்கண்ட முறையில் தற்காலிக பதவிகள் உருவாக்க அரசு அடையாறு பூங்கா நிறுவனத்திற்கு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

| வ. எண். | பதவி | பதவியின் எண்ணிக்கை | நியமனம் செய்யும் முறை |
|---|---|---|---|
| 1. | திட்ட இயக்குநர் | 1 | IAS (or) IFS அலுவலர் |
| 2. | திட்ட அலுவலர் | 2 | நேரடி நியமனம் மூலம் (ஒருவர் அதிவேக வட்டச் சாலை செயல்படுத்தும் போது நியமிக்க வேண்டும்) |
| 3. | நிர்வாக மற்றும் கணக்கு அலுவலர் | 1 | அயற்பணி மூலம் |
| 4. | நிர்வாக மற்றும் கணக்கு உதவியாளர் | 1 | ஆயற்பணி அல்லது ஒப்பந்தம் மூலமாக |
| 5. | அலுவலக உதவியாளர் மற்றும் ஒட்டுநர் | 1 | ஒப்பந்தம் மூலமாக |
| | மொத்தம் | 6 | |

2) மேற்குறித்த பதவிகளுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான செலவினம் அடையாறு பூங்கா நிதியிலிலிந்து வழங்கப்பட வேண்டும். மேலும் இப்பதவிகளில் நியமிக்கப்படுபவர்களுக்கு பொதுத்துறை நிறுவனங்களுடைய விதிகள், ஒழுங்குமுறைகள், சம்பளம், படி மற்றும் இதர சலுகைகளும் பொருந்தும்.

6. இவ்வாணை நிதித்துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.எண்.2343/FS/P/09, நாள் 23.08.2009).

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
உறுப்பினர் – செயலர், அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக்குழு, சென்னை – 17
இயக்குநர், அடையாறு பூங்கா, சென்னை – 17
பொதுத்துறை, சென்னை – 9
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை – 9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
மாநில கணக்காயர், சென்னை-18/35.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வனத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
செயலர், நிதி / பொதுப்பணித்துறை / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/ நெடுஞ்சாலை / சுற்றுச்சூழல் மற்றும் வனம் / கால்நடை பராமரிப்பு மற்றும் மீனவளத்துறை / சென்னை-9.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்